**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.116** **நாள்: 16.08.2018**

**சொத்து வரி சீராய்வு தொடர்பான சுய மதிப்பீட்டு விவர படிவங்களை விடுமுறை நாட்களிலும் பெற்றுக் கொள்ள சிறப்பு மையங்கள் (Counters) ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் வழிகாட்டுதலின்படி, கடந்த 20 ஆண்டுகளாக சீராய்வு செய்யப்படாமல் இருந்த சொத்து வரி சீராய்வு தொடர்பாக தமிழக அரசால் 19.07.2018 மற்றும் 26.07.2018 அன்று வெளியிடப்பட்டுள்ள அரசாணையின்படி, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சொத்து வரி சீரமைப்புடன் கூடிய சீராய்வு மேற்கொள்ள சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக சொத்து உரிமையாளர்கள் தங்களது சொத்து சுய மதிப்பீட்டு விவர அறிக்கையினை 31.08.2018க்குள் தகுந்த படிவத்தில் வழங்கிட பெருநகர சென்னை மாநகராட்சியால் கேட்டுக்கொள்ளப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சி தலைமையகம், மண்டல அலுவலகங்கள், வார்டு அலுவலகங்கள் மற்றும் இணையதளம் (www.chennaicorporation.gov.in) ஆகியவற்றின் மூலம் சொத்து உரிமையாளர்களால் இதுநாள்வரை 6 இலட்சத்து 10 ஆயிரத்து 110 சுய மதிப்பீட்டு விவர படிவங்கள் பெறப்பட்டுள்ளன. இதில் 82 ஆயிரத்து 624 சுய மதிப்பீட்டு சொத்து விவரங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேலும், அடுக்குமாடி குடியிருப்புகளில் வசிக்கும் சொத்து உரிமையாளர்கள் தங்களது கட்டிடத்தின் பரப்பளவு மற்றும் நிலத்தின் பிரிபடாத பாகத்திற்கான (Undivided Share) அளவினை படிவத்தில் பூர்த்தி செய்திடவும், தனி வீட்டின் (Individual House) உரிமையாளர்கள் படிவத்தில் நிலத்தின் மொத்த பரப்பளவு மற்றும் கட்டிடத்தின் பரப்பளவு ஆகியவற்றையும் தனித்தனியாக பூர்த்தி செய்திட வேண்டும்.

வீட்டு வசதி வாரிய/குடிசை மாற்று வாரிய குடியிருப்புகளில் உள்ள ஒதுக்கீடுதாரர்கள் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஒதுக்கீட்டு ஆணை/விற்பனை ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டிடத்தின் பரப்பளவினை படிவத்தில் குறிப்பிட வேண்டும்.

சொத்து வரி சுய மதிப்பீட்டு படிவங்களில் சொத்து உரிமையாளர்களால் வழங்கப்பட்ட தகவல்களில் மாறுதல் ஏதுமிருப்பின், தொடர்புடைய மண்டல உதவி வருவாய் அலுவலர்களை தொடர்பு கொண்டு மாற்றம் செய்யவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இதுவரை சொத்துவரி செலுத்திவரும் உரிமையாளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், மாநகராட்சி மூலமாக உரிமையாளர்களின் கைபேசி எண்களுக்கு தங்களின் சொத்து சுய மதிப்பீட்டு விவரங்களை தாக்கல் செய்யுமாறு மின்னணு குழுமம் (EDP Cell) வாயிலாக குறுஞ்செய்தி அனுப்பப்பட்டுள்ளது.

சொத்து உரிமையாளர்கள், குடியிருப்பு சங்கங்கள் மற்றும் தன்னார்வலர்கள் ஆர்வமுடன் இப்படிவங்களை பெற்று செல்கின்றனர். இவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில் சம்மந்தப்பட்ட மண்டல அலுவலகங்கள் / வார்டு அலுவலகங்கள் ஆகியவற்றில் படிவங்களை பெற்றுக்கொண்டு விவரங்கள் தாக்கல் செய்ய சிறப்பு மையங்கள் (Counters) ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இம்மையங்களில் சொத்துவரி தொடர்பான விவரங்களை அறிந்து கொள்ள ஏதுவாக ஒரு உதவியாளர்/வரிமதிப்பீட்டாளர்/உரிமம் ஆய்வாளர்/வருவாய் துறையைச் சார்ந்த பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும், இணையத்தின் வழியாக படிவங்கள் பெற்றுக்கொள்ளவும், விவரங்களை தாக்கல் செய்யவும் மின்னணு குழுமம் (EDP Cell) விடுமுறை நாட்களிலும் இயங்குவதற்கு சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இந்த அரிய வாய்ப்பினை பொதுமக்கள் பயன்படுத்திக் கொண்டு தங்களது சொத்து வரி சீராய்வு தொடர்பான சுய மதிப்பீட்டு விவர அறிக்கையை தாக்கல் செய்யுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**